இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்

# விலைமனுக்கோரலுக்கான அழைப்பு

## இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்காக 1,500,000 முன்னச்சடிக்கப்பட்ட அட்டைகளின் பெறுகை

## IFB No : MOD/DRP/01/2020

01. இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்காக 1,500,000 முன்னச்சடிக்கப்பட்ட அட்டைகளின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை திணைக்கள பெறுகைக்குழு தலைவர் கோருகிறார்.

02. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 011-2862194 / 011-2862126 என்ற தொலைபேசி எண்களினூடாக வேலை நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையும் ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள பிரதி ஆணையாளர் செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். 10.08.2020 ஆம் திகதியிலிருந்து 28.09.2020 ஆம் திகதி வரை கணக்காளர், கணக்காளர் கிளை, ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள சி கட்டிடத்தொகுதி 12 ஆம் மாடியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.

04. **10.08.2020** ஆம் திகதியிலிருந்து **28.09.2020** ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூ.50,000 ஐ செலுத்திய பின்னர் பத்தரமுல்ல, சுஹுருபாய, 12 ஆம் மாடி சி பிரிவுக்கட்டிடம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள, பிரதான கணக்காளருக்கு எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். கொடுப்பனவு பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

05. விலைமனுக்கள் இரு பிரதிகளில் "மூலப்பிரதி" மற்றும் " நகல்பிரதி" என குறிப்பிடப்பட்டு ஒரு தபாலுறையில் இடப்பட்டு 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி எழுதப்பட்டு **29.09.2020** ஆம் திகதியன்று **பி.ப 2.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பணிப்பாளர் நாயகம் (கணக்காளர் மற்றும் நிதி) காரியாலயம், நிதிக்கிளை, கீழ்மாடி, பாதுகாப்பு அமைச்சு, இல.15/5, பாலதக்ச மாவத்தை, கொழும்பு 03, இலங்கை என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை சமர்ப்பிப்பதற்காக கொள்வனவுக்காரரினால் திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள இறுதித்திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட திகதியிலிருந்து **91** நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமூகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் பிரதிநிதிகள் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.

06. பத்தரமுல்ல, சுஹுருபாய, 13 ஆம் மாடி, சி பிரிவுக்கட்டிடம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்கள அலுவலகத்தின் கூட்ட அறையில் **24.08.2020** ஆம் திகதி **மு.ப. 11.00** மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டம் நடந்தேறும்.

07. விலைமனுவை இட்ட தபாலுறையின் இடதுபக்க மேல் மூளையில் ஒப்பந்தப் பெயர் மற்றும் விலைமனுவிற்கான அழைப்பு (IFB) இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபாவில் 4,500 இற்கான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக்குழு**
**பாதுகாப்பு அமைச்சு**
**இல. 15/5, பாலதக்ச மாவத்தை**
**கொழும்பு 03**